பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

10 01 2025 **FRIDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மருத்துவம், தொழில்நுட்பம் உள்ளிட்ட அனைத்துத்துறைகளிலும் வெளிநாடுவாழ் இந்தியர்கள் சிறந்து விளங்குவதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

2. வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இளம் தலைவர்கள் உரையாடல், இளையோரிடையே தலைமை பண்பை உருவாக்குவதற்காக நடத்தப்படுவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

3. பாதுகாப்பு தளவாட உற்பத்தி நிறுவனங்களின் வளர்ச்சிக்கு தேவையான சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

4. நாட்டில் புத்தொழில் நிறுவனங்கள் பெரும் வளர்ச்சியடைந்து வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

5. மலேசிய ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

*<u>-- இனி விரிவான செய்திகள் ---</u>*

**<<<<<<>>>>**

வெளிநாடுவாழ் இந்தியர்கள், இந்தியாவின் உண்மையான முகத்தை உலக சமுதாயத்திற்கு எடுத்துக்காட்டும் வகையில் திகழ்வதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

புவனேஷ்வரில் வெளிநாடுவாழ் இந்தியர்கள் மாநாட்டில் நிறைவுரையாற்றிய அவர், மருத்துவம், தொழில்நுட்பம் உள்ளிட்ட அனைத்துத்துறைகளிலும் வெளிநாடுவாழ் இந்தியர்கள் சிறந்து விளங்குவதாக கூறினார்.

இந்திய பெண்கள் பல்வேறு தடைகளை கடந்து, சர்வதேச அளவில் சாதனை படைத்து வருவது நமக்கு பெருமிதம் அளிப்பதாக குறிப்பிட்ட அவர், நமது மாணவர்களும், இளைஞர்களும் அவர்களது படைப்பாற்றல் மூலம் எதிர்காலத்திற்கு வழிகாட்டுபவர்களாக திகழ்கின்றனர் என்றார்.

வளர்ச்சியடைந்த பாரதம் உருவாகும்போது, இந்தியாவின் தேவைகளுக்காக மட்டுமன்றி, உலகின் நலனுக்காக பாடுபடும் சூழல் உருவாகும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

முன்னதாக, பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கு பிரவாசி பாரதிய சம்மான் விருதுகளை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வழங்கினார்.

மத்திய அமைச்சர்கள் திரு ஜெய்சங்கர், திரு தர்மேந்திர பிரதான், திரு ஜுவல் ஓரம், ஒடிஷா முதலமைச்சர் திரு மோகன் சரண் மாஜி, உள்ளிட்டோர் நிறைவு விழாவில் கலந்துகொண்டனர்.

<<<<<<>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இளம் தலைவர்கள் உரையாடல் இளையோரிடையே தலைமை பண்பை உருவாக்குவதற்காக நடத்தப்படுவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இதுதொடர்பாக மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா எழுதியுள்ள கட்டுரையையும் பகிர்ந்துள்ளார்.

தேசிய இளையோர் திருவிழா வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இளம் தலைவர்கள் உரையாடும் நிகழ்ச்சியாக வடிவமைக்கப்பட்டுள்ளதாக திரு மன்சுக் மாண்டவியா அந்த கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>

பாதுகாப்பு தளவாட உற்பத்தி நிறுவனங்களின் வளர்ச்சிக்கு தேவையான சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

பெங்களுருவில் நடைபெறவுள்ள ஏரோ இந்தியா கண்காட்சியையொட்டி, புதுதில்லியில் இன்று வெளிநாட்டு தூதர்களின் வட்டமேசை நிகழ்ச்சியில் பேசிய அவர், தொழில்நுட்ப ஒத்துழைப்புகளை மேம்படுத்தி, சுயசார்பு நிலையை ஏற்படுத்த அரசு தீவிர கவனம் செலுத்தி வருவதாக கூறினார்.

பாதுகாப்பு மற்றும் விண்வெளித்துறையில் இந்தியாவின் வளர்ச்சியை சுட்டிக்காட்டிய அவர், அதிநவீன தொழில்நுட்பங்களை உள்நாட்டிலேயே உருவாக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

நான்காம் தலைமுறை போர் விமானங்கள், அணுசக்தி நீர்மூழ்கி கப்பல், பீரங்கிகள், கண்டம் விட்டு கண்டம் பாயும் அணு ஆயுத ஏவுகணைகளை தயாரிக்கும் நாடுகளின் பட்டியலில் இந்தியா இணைந்திருப்பதையும் திரு ராஜ்நாத் சிங் சுட்டிக்காட்டினார்.

<<<<<<>>>>

ஜார்கண்ட் மாநிலம் ராஞ்சியில் **Coal India** நிறுவனத்தின் துணை நிறுவனமான **CCL** நிறுவனம் சார்பில், அமைக்கப்பட உள்ள 200 படுக்கை வசதிகொண்ட மருத்துவமனைக்கு மத்திய நிலக்கரித்துறை அமைச்சர் திரு கிஷன் ரெட்டி இன்று அடிக்கல் நாட்டினார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்த மருத்துவமனை ஜார்கண்ட் மக்களுக்கு சுகாதார சேவை வழங்குவதில் மைல்கல்லாக திகழும் என்றார்.

பின்னர், இந்திய நிலக்கரி மேலாண்மை நிறுவனத்தின், பயிற்சி அதிகாரிகளிடையே கலந்துரையாடிய திரு கிஷன் ரெட்டி, பசுமை எரிசக்தியை ஊக்குவிக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>

இஸ்ரோவின் 100-ஆவது செயற்கைக்கோளான **NavIc** இம்மாத இறுதியில் விண்ணில் செலுத்தப்படும் என இஸ்ரோ தலைவர் திரு சோம்நாத் தெரிவித்துள்ளார்.

ஆகாஷ்வாணி செய்திப்பிரிவுக்கு அவர் அளித்துள்ள பேட்டியில், விண்வெளியில் செயற்கைக்கோள்கள் இணைப்புக்கான தேதி ஓரிரு நாட்களில் முடிவு செய்யப்படும் என்று கூறியுள்ளார்.

அண்மையில் செலுத்தப்பட்ட இரண்டு செயற்கைக்கோள்களும் விண்வெளியில் பாதுகாப்பாக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>

பொது சிவில் சட்ட பயன்பாடு குறித்து உத்தராகண்ட் மாநில அரசு அதிகாரிகளுக்கு தீவிர பயிற்சி அளிக்கப்படுகிறது.

இதன் ஒரு பகுதியாக, அம்மாநிலத்தின் சமோலி மாவட்டத்தில் பணியாற்றும் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு, பொது சிவில் சட்ட இணையதளம் வாயிலாக பதிவு செய்வது உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

அடுத்தக்கட்டமாக, ருத்ரபிரயாக் மாவட்டத்தில் வரும் 13-ஆம் தேதிமுதல், 15-ஆம் தேதிவரை இந்த பயிற்சி முகாம் நடைபெறவுள்ளது.

<<<<<<>>>>

நாட்டில் புத்தொழில் நிறுவனங்கள் பெரும் வளர்ச்சியடைந்து வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய, தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக ஊக்குவிப்புத்துறை செயலாளர் திரு அமர்தீப் சிங் பாட்டியா, கடந்த ஒன்பது ஆண்டுகளில் மட்டும் சுமார் ஒன்றரை லட்சத்துக்கும் மேற்பட்ட புத்தொழில்கள் பதிவு செய்யப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

2016-ஆம் ஆண்டில் நான்கு மாநிலங்களில் மட்டுமே புத்தொழில்களுக்கென பிரத்யேக கொள்கை வகுக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது 31 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் இதுபோன்ற கொள்கைகளை வகுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நாட்டின 779 மாவட்டங்களில் உள்ள இரண்டு மற்றும் மூன்றாம் நிலை நகரங்களிலும் புத்தொழில்கள் தொடங்கப்படுவதாக திரு பாட்டியா தெரிவித்தார்.

<<<<<<>>>>

தில்லி சட்டப்பேரவைக்கு அடுத்த மாதம் 5-ஆம்தேதி நடைபெறவுள்ள தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது.

இதேபோல, உத்தரப்பிரதேசம் மற்றும் தமிழகத்தில் காலியாக உள்ள தலா ஒரு சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கலும் இன்று தொடங்கியது.

தமிழகத்தில், ஈரோடு கிழக்கு தொகுதியில், மனு தாக்கலுக்கு முதல் நாளான இன்று மூன்று சுயேட்சைகள் மனு தாக்கல் செய்துள்ளனர்.

இத்தொகுதியில், தேர்தல் நடத்தை விதிகள் தீவிரமாக அமல்படுத்தப்படுவதாக தேர்தல் நடத்தும் அலுவலரும், மாநகராட்சி ஆணையருமான திரு மனீஷ் தெரிவித்துள்ளார்.

*(வாய்ஸ் பைட் - மனீஷ் - 39 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>

இந்திய கடற்படை கப்பலான **INS Mormugao,** பிரான்ஸ் கடற்படையுடன் கூட்டு ஒத்திகையில் ஈடுபட்டுள்ளது.

கடற்படை கப்பலுடன் விமானப்படையின் போர் விமானங்களும் இந்த ஒத்திகையில் பங்கேற்றுள்ளன.

மேற்கு கடல்பகுதியில் நடைபெறும் இந்த கூட்டு ஒத்திகை, இருதரப்பு ராணுவ ஒத்துழைப்புக்கு வலுசேர்க்கும் என்று கடற்படை தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>

புதுதில்லியில் நடைபெற்ற கேலோ இந்தியா மகளிர் யோகாசன லீக் போட்டியில், மேற்குவங்கம் மற்றும் மத்தியப்பிரதேச மாநிலங்களை சேர்ந்த தடகள வீராங்கனைகள் சாதனை படைத்துள்ளனர்.

கடந்தாண்டு மண்டல வாரியாக நடத்தப்பட்ட யோகாசன லீக் போட்டியின்மூலம், தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்கள் தற்போதைய தேசிய அளவிலான லீக் போட்டியில் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை செயலாளர் திருமதி சுஜாதா சதுர்வேதி, உத்தராகண்டில் நடைபெறவுள்ள 38-ஆவது தேசிய விளையாட்டுப்போட்டியில் யோகாசனம் ஒரு போட்டி விளையாட்டாக இடம்பெறவுள்ளது என்றார்.

அடுத்த ஆண்டு ஜப்பானில் நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டுப்போட்டியில், காட்சிப்போட்டியாக யோகாசனம் நடத்தப்பட இருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

<<<<<<>>>>

அமெரிக்க அதிபராக பொறுப்பேற்கவுள்ள திரு டொனால்டு ட்ரம்புடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருப்பதாக ரஷ்ய அதிபர் திரு விளாடிமீர் புட்டின் தெரிவித்துள்ளார்.

மாஸ்கோவில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த அதிபர் மாளிகையின் செய்தித்தொடர்பாளர் திரு **Dmitry Peskov,** அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதில் ஆர்வமுடன் இருப்பதை அதிபர் புட்டின் ஏற்கனவே வெளிப்படுத்தியிருப்பதாக கூறினார்.

இதனிடையே, குடியரசு கட்சியை சேர்ந்த ஆளுநர்கள் கூட்டத்தில் பேசிய திரு டொனால்டு ட்ரம்பும், ரஷ்ய அதிபருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறியுள்ளார்.

**<<<<<<>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

மலேசிய ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 26-24, 21-15 என்ற செட் கணக்கில், மலேசியாவின் **E.Y.Teo – Y.S. Ong** இணையை வென்றது.

--------

அயர்லாந்துக்கு எதிரான முதலாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

ராஜ்கோட்டில் நடைபெற்ற இப்போட்டியில், டாஸ் வென்று முதலில் பேட் செய்த அயர்லாந்து, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில், 7 விக்கெட் இழப்பிற்கு 238 ரன் எடுத்தது.

அதிகபட்சமாக **Gaby Lewis** 92 ரன் எடுத்தார்.

பிரியா மிஸ்ரா இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

239 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பின்னர் பேட் செய்த இந்தியா, 34 புள்ளி மூன்று ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 241 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

அதிகபட்சமாக, பிரதிகா ராவல் 89 ரன் எடுத்தார்.

மூன்று போட்டிகளை கொண்ட இந்த தொடரின் இரண்டாவது ஆட்டம் நாளை மறுநாள் நடைபெறவுள்ளது.

----------------

ஆசியகோப்பை மகளிர் உள்ளரங்கு கால்பந்து தகுதிச்சுற்று போட்டிக்கான 14 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டி, இந்தோனேஷியாவில் வரும் 15-ஆம் தேதி தொடங்கி, 19-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

புதுதில்லியில் நடைபெற்றுவரும் சர்வதேச ஜூனியர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் மாயா ராஜேஷ்வரன் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

<<<<<<END>>>>